காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட,காஞ்சிபுரம் மாவட்டத்தின் பெரிய ஏரியான உத்திர மேரூர் ஏரி அதன் கொள்ளளவு நிறைந்து உபரி நீர் வெளியேறுவதை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர், க.சுந்தர் எம்.எல்.ஏ. நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் ஆகியோர் மலர் தூவி வரவேற்று, மதகைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அதுபோது உத்திரமேரூர் ஒன்றிய கழக செயலாளர் ஒன்றிய குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன் , பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல், இரா. நாகன், பேரூராட்சி மன்றத் தலைவர், பொன்.சசிகுமார், ஒன்றிய பெருந்தலைவர் ஹேமலதா ஞானசேகரன், துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜ், அ.சண்முகம் உள்ளிட்ட கழகத்தினர் மலர் தூவி வரவேற்றனர். இதில் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,கழக தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.





ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., ஏற்பாட்டில்

## துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா - மாபெரும் சிலம்பாட்டப் போட்டி!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பரிசு வழங்குகிறார்!

சென்னை,டிச.9-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாளையொட்டி பள்ளி மாணவ, மாணவிகளின் திறமையை ஊக்குவிக்கும் வண்ணம் 500 மாணவர்கள் பங்கேற்கும் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் போட்டி கழக துணை அமைப்பு செயலாளர், திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி அவர்களின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

இந்த சிலம்பாட்ட போட்டி இரண்டு பகுதிகளாக நடைபெற்று முடிந்தது.

அதன் விவரம் வருமாறு.

8.12.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் மதியம் 3 மணிவரை சென்னை600 012, குக் சாலையில் உள்ள விளையாட்டுத்திடலில் போட்டிகள் நடத்தி மாணவர்கள் தேர்வு செய்யபட்டார்கள். இந்த போட்டியினை,சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு 08.12.2024 ஞாயிற்றுகிழமை காலை 7 மணியளவில் துவக்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக செவ்வாய்கிழமை 10.12.2024 நாளை மாலை 5 மணியளவில் சென்னை 600 012, புளியந்தோப்பு, டிகாஸ்டர் சாலையில் அமைந்துள்ள டான் போஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரி விளையாட்டு திடலில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் போட்டியில் பங்கேற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்ச்சி திரு.வி.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ப.தாயகம்கவி தலைமையில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் வருகை தந்து மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்.

திரு.வி.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ப.தாயகம்கவி ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் சிலம்பகலையில் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகள் பங்கேற்று தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி பரிசுகளை பெற்று செல்ல நல்லவாய்ப்பாக அமையும்.

போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்படும்.

இந்த போட்டியில் கலந்துகொள்ள நுழைவுக்கட்டணம் ஏதுமில்லை.

இந்நிகழ்வில் மேயர் பிரியாராஜன்,

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, பகுதி கழக செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து பாகமுகவர்கள் பங்கேற்கிறார்கள்.


திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில்

## ‘ஊர்தோறும் கழகக் கொடி ஏற்றுவோம்’ நிகழ்ச்சி இரண்டாவது கட்டம்!

### மாவட்டச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு



திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் கீழ்காணும் ஒன்றிய, நகர, பேரூர்களில் ஊர்தோறும், கிராமங்கள்தோறும் கழகத்தின் மூத்த முன்னோடிகள், சட்ட எரிப்பு உள்ளிட்ட, பல்வேறு போராட்டங்களில் சிறை சென்ற முன்னோடிகள் கீழ்கண்ட அட்டவணைப்படி கழக கொடியினை ஏற்றிட உள்ளார்கள்.

| நாள் | ஒன்றியம் | கொடிஏற்றி வாழ்த்துரை | கொடிஏற்றுபவர் குறித்துகுறிப்பு | நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் |
|---|---|---|---|---|
| 19.12.24 | பூண்டி மேற்கு | த.வ.உமாபதி திருத்தணி நகரம் | முன்னாள் நகர செயலாளர் கழக மூத்த முன்னோடி சட்ட எரிப்பு உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர் | தா.கிறிஸ்டி (எ) அன்பரசு ஒன்றிய கழகச் செயலாளர் |
| 19.12.24 | திருவள்ளூர் நகரம் | மு.பகலவன் பொன்னேரி | மாவட்ட மாணவரணி அமைப்பாளராக திறம்பட பணியாற்றியவர் கழக மூத்த முன்னோடி சட்ட எரிப்பு உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர் | சி.சு.ரவிச்சந்திரன் நகரக் கழகச் செயலாளர் |
| 19.12.24 | கடம்பத்தூர் மேற்கு | T.ரகுநாதன் திருத்தணி நகரம் | கழக மூத்த முன்னோடி சட்ட எரிப்பு உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர் | மோ.ரமேஷ் ஒன்றிய கழகச் செயலாளர் |
| 19.12.24 | திருவாலங்காடு மேற்கு | P.S.பார்த்தசாரதி ,திருத்தணி நகரம் | கழக மூத்த வழக்கறிஞர் கழக மூத்த முன்னோடி அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர் | கூளூர்.எம்.ராஜேந்திரன் ஒன்றிய கழகச் செயலாளர் |
| 20.12.24 | பள்ளிப்பட்டு தெற்கு | NPS மணி திருவள்ளூர் | கழக மூத்த முன்னோடி சட்ட எரிப்பு உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர் | ஜி.ரவீந்திரா ஒன்றிய கழகச் செயலாளர் |
| 20.12.24 | பள்ளிப்பட்டு மத்தியம் | சுப்பிரமணி மேல்வலசை | கழக மூத்த முன்னோடி சட்ட எரிப்பு உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர் | பி.டி.சந்திரன் ஒன்றிய கழகச் செயலாளர் |
| 20.12.24 | பள்ளிப்பட்டு பேரூர் | J.M.சங்கரன், பொதட்டூர் பேட்டை | கழக மூத்தமுன்னோடி சட்ட எரிப்பு உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர் | சி.ஜெ.செந்தில்குமார் பேரூர் பொறுப்பாளர் |
| 20.12.24 | திருத்தணி நகரம் | P.ஏழுமலை | கழக மூத்த முன்னோடி சட்ட எரிப்பு உள்ளிட்ட அனைத்துபோராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர் | வி.வினோத்குமார் நகரக் கழகச் செயலாளர் |

எனவே மேற்கண்ட நிகழ்ச்சியில் கழக கொள்கை பரப்பு செயலாளர் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அவைத்தலைவர் கே.திராவிடபக்தன், தொகுதி பார்வையாளர்கள் சண்முகநாதன், மாஸ்டர் பெ.சேகர், கழக விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிஷேசன், கழக நெசவாளர் அணி துணை தலைவர் ஒ.ஏ,நாகலிங்கம், மாநில தொண்டரணி பயிற்சியாளர் மாஸ்டர். இ குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர். வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்ரவர்த்தி. பொதுக்குழு உறுப்பினர்கள் பாசிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம். வி.கிஷோர், ம.சுப்பிரமணியம், பி.ராஜேஸ்வரி இராவிந்திரநாத் கலந்து கொள்கிறார்கள்

குறிப்பு: அனைத்து கிளைகளிலும் கழக கொடி ஏற்றும் நிகழ்வினை சிறப்பாக ஏற்பாடு செய்திட ஒன்றிய, நகர், பேரூர் கழக செயலாளர்கள் கேட்டுக்கொள்கிறேன் நிகழ்ச்சியில் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ**
செயலாளர்.
திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.


# அறிஞர் அண்ணாவின் தம்பிகளின் ஆளுமையைப் பாரீர்!

ஃபெஞ்சல் புயல் மற்றும் மழை சென்னை, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களையும், டெல்லா சீமையையும் நிர்மூலமாக்கி நிர்கதியாய் மக்களை நிற்கச் செய்தது. பல நூறு கிராமங்கள் வெள்ளம் சூழ்ந்து வேதனையில் தவித்தது. எவ்வளவு பெரிய ஆளுமையும் ஆடிப் போகும் அளவிற்கு அளவுகடந்த மழை. கடல் சீற்றம், பெருங்காற்று அதை மிகவும் விரைந்து செயல்பட்டு தீர்த்த முதல்வர் அவர்களின் ஆளுமைத் திறனை மாற்றாரும் போற்றினர். மதியுள்ளோர் வாழ்த்தினர்.

ஆனால் சில சிறுமைபுத்தி அரசியல்வாதிகள் பாராட்ட வேண்டாம் அரசு மீது பழிப்போட்டு பேசாமலாவது இருக்கலாம். ஆனால் மக்களிடம் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவதற்கு வசைபாடி தினம் தினம் சொற்களை அள்ளி வீசுகின்றனர்.

பேரிடர் நிவாரண நிதியாக கேட்ட ரூ.38000 கோடி நிதியை இன்று வரை தராத ஒரு ஒன்றிய அரசு. அதற்காகத் தான் பா.ஜ.கவிற்கு பல் உடையும்படி பளார் என்று விட்டனர் பாண்டிச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் தோல்வி என்ற சம்மட்டி அடி. சொரணை உள்ளவர்களாக இருந்தால் தமிழர்களும் இந்தியர்களே என மதித்து கேட்ட நிவாரண நிதியை உடனே வழங்கி இருப்பர். மைனாரிட்டி அரசாக இருக்கும் போதே மமதை குறையவில்லை. அந்த நிதியை இன்னும் கூட வழங்கவில்லை.

தற்போது அவசர நிதியாக முதல்வர் கேட்டுள்ள ரூ.2000 கோடியையாவது தருவார்களா? எங்கே தரப்போகிறார்கள்? மழை ஓய்ந்த பின் தான் பிரதமர் மோடி நம் முதல்வரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரம் கேட்டுள்ளார். எத்தனை நாட்கள் கழித்து? நான்கு நாட்கள் கழித்து. பிரதமர் மோடியை தவிர வேறு எந்த நாட்டு பிரதமரும் தன் மக்களைப் பற்றி கவலைப்படமல் இப்படி இருக்க மாட்டார்கள். அவருக்கு வெளிநாடு போவதற்கே நேரம் சரியாக இருக்கிறது. தன்நாட்டுப் பிரச்சினைகள் அவருக்கு பெரிதா என்ன? தற்போதைய தகவல் ஒன்றிய அரசு ரூ.944.80 கோடி தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது. முதல்வர் மேலும் தற்காலிக நிரந்தர மறுசீரமைப்பு பணிகளுக்கு ரூ.6675 கோடி வழங்குமாறு வந்துள்ள மத்திய குழுவிடம் கோரிக்கை வைத்துள்ளார். இது நடக்குமா? நிதியை கொடுப்பார்களா? புதுச்சேரி மற்றும் காரைக்காலை பேரிடர் பகுதியாக அறிவித்த ஒன்றிய அரசு தமிழ்நாட்டை மட்டும் அறிவிக்காதது ஏன்? பல லட்சம் ஹெக்டேர் பயிர்கள் நீரில் மூழ்கின, பல லட்சம் மக்கள் வீடு இழந்து சொத்து இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர் ஒன்றிய அரசுக்கு ஏன் இந்த பாரபட்சம்?

இத்தகைய ஒன்றிய அரசை எதிர்பார்க்காமல் இருப்பதை வைத்து தம் மாநில மக்களை கண்ணீர் வடிக்க விடாமல் ஓயாத மழையிலும் ஓடிஓடி காத்திட்டார் நம் முதல்வர். நெருக்கடி நிலையை எதிர்த்ததற்கும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவளித்ததற்கும் இரண்டு முறை ஆட்சியைப் பறிகொடுத்தப் போதும் உறுதியில் இமயமே தோற்கும் வண்ணம் இருந்த எங்கள் கலைஞர் அவர்களின் மகனல்லவா! தந்தை பெரியார் என்ற பேரறிவாளனின் பேரனன்றோ! அறிஞர் அண்ணாவின் அறிவார்ந்த தம்பியாயிற்றே! யார்? அவர் தான் நம் முதல்வர் தளபதி. இந்த ஆண்டும் வருகிறது பேய் மழை என்றார்கள் வானிலை வல்லுநர்கள்.



**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

அன்றே களமிறங்கி தொடங்கியவர் தான் முதல்வர் இன்றுவரை ஓயவில்லை. உழைப்பால் உயர்ந்தவருக்கு உழைக்க சொல்லியா தரவேண்டும். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அன்று மக்களைப் பார்க்க போனவர் மக்களோடு மக்களாகவே ஐக்கியம் ஆகி விட்டார். அறிஞர் அண்ணா ஒருமுறை நம் முதல்வரைப் பார்த்து அப்பனுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறாய் என்றாராம். அதே போல் இன்று அண்ணா மட்டும் இருந்திருந்தால் உதயநிதியின் செயல்பாட்டை பார்த்து தம்பி ஸ்டாலின் மகனோ தாத்தா கலைஞரையும், தன் தந்தையையும் விட சீறிப்பாய்ந்து செயல்பாட்டில் ஜொலிக்கின்றார் என்று பெருமையுடன் கூறியிருப்பார்.

உதவுவதற்கு ஒன்றிய அரசு இல்லை. மக்களைக் காக்க வேண்டும். அதிக கனமழையென்றால் எவ்வளவுதான் தூர் வாரினாலும் கால்வாய்களில் ஓரளவுக்குத் தான் தண்ணீர் செல்லும், மீதி தண்ணீர் நகருக்குள் தான் செல்லும். அதுவும் ஏரி பகுதி என்றால் எழுத தேவையில்லை. அரசு எவ்வளவு பணிபுரிந்தாலும் தண்ணீர் தேங்காமல் இருக்க மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

நள்ளிரவிலும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைநகரை சுற்றிச்சுற்றி பார்க்கிறார். ஆலோசனைகளை வழங்குகிறார். எங்கு சென்ற ஆண்டு பெய்த மழையில் அதிகம் பாதிக்கப்பட்டதோ அங்கெல்லாம் சென்று பாதிப்பை வரவிடாமல் தடுப்பது எப்படி என்று அதிகாரிகளுடன் ஆலோசிக்கிறார். விடிய விடிய இப்படி வேலை நடக்கிறது.

கிண்டி ரேஸ் கிளப்பிடமிருந்து பெறப்பட்ட நிலத்தில் புதிதாக 4 குளங்கள் வெட்டப்பட்டுள்ளது. இதனால் 5 செ.மீ மழைப் பெய்தாலே வேளச்சேரி பகுதி நீரில் மூழ்கும் என்ற நிலைமாறி இப்போது 20 செ.மீ மழை பெய்தும் வேளச்சேரி நீரில் மூழ்கவில்லை என்று ஆங்கிலப் பத்திரிகைகள் பாராட்டி எழுதியுள்ளன. அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் உயரும். வேளச்சேரியில் உள்ள வீராங்கல் ஓடை தூர்வாரப்பட்டதாலும், நாராயணபுரம் ஏரி சீரமைக்கப்பட்டதாலும் இந்த மழையில் பெரும் சேதமில்லை.

லண்டன் போய் அரசியல் பயின்று கொண்டு வந்தேன் என்று கூறும் பா.ஜ.க அண்ணாமலை தமிழ்நாட்டில் வந்து கால் வைத்தவுடன் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது. மழையால் பாதித்த இடங்களில் தண்டோரா போட்டிருந்தால் மக்கள் பாதுகாக்கப் பட்டிருப்பார்கள், நெற்பயிர்கள் நீரில் மூழ்கி இருக்கிறது என்றெல்லாம் கதை அளக்கிறார். சாத்தனூர் அணை திறப்பதற்கு முன்பு 5 முறை வெள்ளம் வரும் என்று அரசு அறிவித்தது. சமூகவலைதளங்கள் இருக்கும் இந்த காலத்தில் தண்டோரா போடச் சொல்கிறார் அண்ணாமலை. லண்டலில் அரசியல் பாடம் கற்றபோது எப்படி அவதூறு பேசுவது என்று தான் கற்றுத் தந்தார்களா? கடந்த காலங்களில் பேரிடர் ஏற்பட்ட போதெல்லாம் ஒன்றிய அரசு உடனுக்குடன் நிதி வழங்கி விட்டதாம். எவ்வளவு பெரிய பொய் பார்த்தீரா!

அண்ணா, அண்ணா என்று பேசிக் கொண்டே அருமையாக விஷத்தை கக்குகிறார். டெல்லி போகிறாராம். ஏற்கனவே கேட்ட ரூ.38000 கோடியையும், தற்போது கேட்டுள்ள ரூ.2000 கோடியையும் வாங்கித் தருவாரா? தமிழ்நாட்டிற்கு வந்தவுடன் அத்தனையும் அபசகுன வார்த்தைகள் தான். உதயநிதியை ஒழித்துக் கட்டுவேன், செந்தில் பாலாஜியை தீர்த்துக் கட்டுவேன் இதான் அவர் பேச்சு. அண்ணாமலையே அரசியலில் நீங்கள் நினைப்பதெல்லாம் ஒருக்காலும் நடக்காது. யாரும் யாரையும் ஒழித்துக் கட்ட முடியாது. பீனிக்ஸ் பறவைகளை உங்கள் பேச்சால் என்றும் ஒழிக்கமுடியாது. குடும்ப அரசியலைப் பற்றி குதற்கமாக பேசுகிறீரே பா.ஜ.கவில் உள்ள குடும்ப அரசியலை பட்டியல் போடவா? வேண்டாம்! நாங்கள் தமிழ்நாட்டில் அரசியல் கற்றவர்கள் லண்டன் சென்றல்ல! ஒரு வார்த்தை தவறாக பேசினாலும் தந்தை பெரியார் பேச்சை நிறுத்தச் சொல்வார். அந்த தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரிடம் நாங்கள் அரசியல் கற்றவர்கள்.

பொக்லைன், லாரிகள் மூலம் முதல்வர் பார்வையில் கால்வாயில் உள்ள குப்பைகள் அகற்றப்பட்டுவிட்டன. உயிரிழந்தவர்களுக்கு ரூ.5 லட்சம், மூன்று மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.2000 ரூபாய், நெற்பயிருக்கு 1ஹெக்டேருக்கு 17000 ரூபாய். சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.10000, பல்லாண்டு பயிர்களுக்கு ஹெக்டேருக்கு 22,500 ரூபாய், மானாவாரிப் பயிர்களுக்கு ரூ.8500, எருது பசுகளுக்கு 37,500 ரூபாய், ஆடுகளுக்கு 4000 ரூபாய், மாணவர்களுக்கு புதிய நோட்டு புத்தகங்கள் என முதல்வர் அறிவித்துள்ளார்கள். பா.ஜ.க ஆளும் உத்திரகாண்டில் மழைவந்த போது எத்தனைப் பேர் உயிரிழந்தார்கள் என்பதை அறிவிக்க முடியுமா? இவ்வளவு பெரிய மழையிலும் தமிழ்நாட்டில் உயிரிழப்பு மிக மிகக் குறைவு. காரணம் அரசின் தொடர் அறிவிப்பு தான். இவ்வளவு மெதுவாக ஒரு புயல் நாம் காணாத சுனாமி போன்றது. இயற்கையை எவரால் வெல்லமுடியும். வல்லரசு அமெரிக்கா நியூயார்க் நகரத்தில் மூன்று லட்சம் பேர் பாதிக்கப்பட்டார்கள். அதிபர் ஜோ பைடனால் என்ன செய்ய முடிந்தது. உயிரிழப்பை தடுக்க முடிந்தா? புயலை தடுக்க முடிந்தா? பைடன் கைபிசைந்து கண்ணீரோடு தான் நின்றார்.

5 லட்சம் பேருக்கு மேல் உணவு வழங்கப்பட்டுள்ளது. 500க்கும் மேல் மருத்துவ மூகாம்கள் நடத்தப்பட்டு மருந்துகளும் கொடுக்கப்பட்டன. 388 அம்மா உணவகங்களில் இரண்டு நாட்களுக்கு லட்சக்கணக்கான மக்களுக்கு இலவச உணவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தூய்மை பணியாளர்களுடன் சேர்ந்து தெருவோர கடைகளில் தேநீர் அருந்தி ஊக்கப்படுத்தியுள்ளார் முதல்வர் அவர்கள். தன்னார்வலர்களையும் உற்சாகப்படுத்தியுள்ளார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். தூய்மைப் பணியாளர்களுடன் சேர்ந்து உணவு உண்டு உற்சாகப்படுத்தியோடு திராவிட மாடல் அரசில் ஆண்டான் அடிமை என்ற பேதம் இல்லை, எல்லாருக்கும் எல்லாமும் என்று நிலை நாட்டினார் நம்முதல்வர்.

உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வராக அறிவிக்கப்பட்டவுடன் வந்த விமர்சனங்களுக்கு ஒவ்வொருவர் பேசிய பேச்சுக்கும் பதில் தராமல் என் செயல்பாட்டால் காட்டுவேன் என்று கூறினார். அதை தற்போதைய செயலால் புரிய வைத்திருப்பார் என்று நம்புகிறேன்.

தன்னைவிட 15 வயது குறைவான மருத்துவர் ராமதாசை மருத்துவர் அய்யா என்று தான் கலைஞரே கூறுவார். ஆனால் மருத்துவர் ராமதாசோ எங்கள் முதல்வரை ஒருமையில் பேசுகிறார். மக்கள் வாக்களித்து முதல்வரானவரை பார்க்க ராமதாசுக்கு வெட்கமாக இருக்கிறதாம். அவரும் குடும்ப அரசியலைப் பற்றி பேசுகிறார். பா.ம.கவில் வேறு யாருமே இல்லை பாருங்கள்! பதவி என்றால் அவர் கண்ணுக்கு அன்புமணி மற்றும் மருமகள் சௌமியா தான் தெரிகின்றனர். அன்புமணிக்கு ஒன்றிய அமைச்சர் பதவியை வாங்கித் தந்தவரே தலைவர் கலைஞர் அவர்கள் தான். இந்த அண்புமணி தான் முதல்வரை மன்னிப்பு கேட்கச் சொல்கிறார்.

தற்போது கடும் புயல் மழை வரும் என்று ரெட் அலர்ட் விட்ட பிறகு குழந்தைகள் பாதிக்கப்படக் கூடாதென்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்தார் நம் முதல்வர். உடனே அன்புமணி பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை விட்ட முதல்வர் டாஸ்மார்க் கடைகளுக்கு ஏன் விடுமுறை விடவில்லை என்று அறைக்குள் அடங்கிக் கொண்டு கேள்வி எழுப்புகிறார்.

அன்புமணியே பள்ளி கல்லூரிகளும் டாஸ்மார்க்கும் ஒன்றா? அட அதிமேதாவியே! உங்கள் கட்சியில் குடிகாரர்களே இல்லையா? ஏன் நீங்களும், உங்கள் தந்தை மருத்துவர் ராமதாசும் நன்றாக குடிப்பீரென்று வன்னியர் சங்கத்தை தொடங்கிய ராமமூர்த்தி என்பவர் தொடர்ந்து பேசி வருகிறார். முதலில் அதை உங்களால் மறுக்க முடியுமா? ஏன் ராமசாமி படையாச்சியாருக்கு சிலை வைத்தது கலைஞர் தானே! அன்று மேயராக இருந்தவர் எங்கள் முதல்வர் தானே! இதை இல்லை என்பீர்களா? 20% பெரும்பான்மை வன்னியர் சமூகத்துக்கும் மற்ற சில சமூகத்துக்கும் இடஒதுக்கீடு தந்தது யார் தலைவர் கலைஞர் தானே!

மது குடிப்பதை நான் நியாயப்படுத்தவில்லை. ஆனால் மது குடிப்பதில் ரஷ்யா நாடு தான் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் மது குடிப்பதில் அருணாச்சலப்பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. ஏன் இராணுவத்தில் பணியாற்றுவோருக்கு மது வழங்கப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் என்ன? பணி மற்றும் குளிர் பிரதேசங்களில் இருப்பவர்கள் கட்டாயம் மது அருந்துவார்கள் என்பது தான். மழை கடுமையாக பெய்யும் போது மது குடிப்பவர்களுக்கு மது அவசியம் தேவைப்படும். இந்த நேரத்தில் டாஸ்மாக்கை எப்படி மூட முடியும்? முதலில் உங்கள் கட்சிக்காரர்களை ஒருவரையும் குடிக்காமல் தடுக்க உங்களால் முடியுமா?

அடுத்து சீமான் ஆட்சியில் அமர்ந்து பார்த்தால் தான் நிர்வாகமும், சிரமமும், வலியும், வேதனையும் அவருக்குத் தெரியும். இப்படி கலைஞர் அவர்களைப் பற்றி தரக் குறைவாகப் பேசியதால்தான் சில நாட்களுக்கு முன்பு நடந்த விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் சீமான் கட்சி டெபாசிட் இழந்தது. மக்களே அவர்களுக்கு தண்டனை தந்தனர். இதற்கு மேல் பதில் சொல்ல விரும்பவில்லை.

எதிர்கட்சித் தலைவர் எடப்பாடியார் தமிழகத்தின் இரண்டாவது பெரிய கட்சியில் பொதுச் செயலாளர் என்பதை மறந்து எதைப் பேசுவது என்றாலும் பொறுப்பற்று பேசுகிறார். நம் முதல்வர் அமெரிக்கா சென்று வந்த போது என்னனென்ன முதலீடுகளைப் பெற்றோம் என்று விளக்கினார். ஆனால் எடப்பாடியாரோ அதற்கு வெள்ளை அறிக்கை வேண்டுமென்றார். தற்போது வெள்ள நிவாரண நடவடிக்கை சிறப்பாக நடத்துள்ளது. அதற்கும் வெள்ளை அறிக்கை வேண்டுமென்கிறார்.

அவருக்கு பக்கத்தில் இருக்கின்ற குதர்கமாகவே சிந்திந்து சிந்திந்து பழுத்துப் போன ஒருவர் சொல்லிக் கொடுப்பதை அப்படியே எடப்பாடியார் சொல்கிறார். பாவம் அவருக்கு வெள்ளை அறிக்கையும் தெரியாது, கருப்பு அறிக்கையும் தெரியாது. அதற்கு பதிலாகத்தான் உடனே தயங்காமல் தனது தாத்தா கலைஞர் அவர்களைப் போல் வெள்ள நிவாரணப் பணியைப் பாருங்கள் அதுதான் வெள்ளை அறிக்கை என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒருமுறை தெரிவித்தார். இது முதிர்ச்சியில்லாத பதில் என்று எடப்பாடி கூறுகிறார். எடப்பாடியாரே உங்களுக்கு பக்கத்தில் இருக்கும் குதர்க்கவாதி அம்மையாரால் ஓரங்கட்டப்பட்டவர். உங்களையே விழுங்கி விடுவார். உங்கள் பதவியை தக்கவைத்துக் கொள்ளுங்கள் எச்சரிக்கை.

கஜா புயல் வந்து மக்களின் வாழ்வாதாரமான லட்சக்கணக்கான தென்னை மரங்களை அடியோடு சாய்த்து போட்டது. டெல்டா மக்களின் வாழ்வை சீரழித்தது. புயல் வந்த அடுத்த நிமிடம் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்க எதிர்கட்சித் தலைவர் தளபதி அவர்கள் உடனே புறப்பட்டு சென்றார். முதல்வராக இருந்த எடப்பாடியார் இரண்டு நாட்கள் கழித்து தான் போனார். அதுவும் ஹெலிகாப்டரில். உடனே மழைத் தூரல் இரண்டு சொட்டு விழுந்த உடன் வந்த ஹெலிகாப்டரிலேயே திரும்பிச் சென்றார். பிறகு பத்திரிகைகள் எல்லாம் விமர்சனம் செய்த பிறகு ஒருவாரம் கழித்து பார்க்கப் போனார். இதுதான் அவரது ஆளுமை. வான்கோழியால் மயில் போல் ஆடமுடியாது. அதேபோல் காகத்தால் குயில்போல் பாடமுடியாது. மயில் மயில் தான். குயில் குயில்தான். காகமும் வான்கோழியும் வேறு தான். இது புரியவேண்டியவர்களுக்கு புரிந்தால் போதும்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் 45 வயதில் முதல்வரானார். தலைவர் கலைஞர் அவர்கள் 44 வயதில் முதல்வரானார். செல்வி.ஜெயலலிதா அம்மையார் அவர்கள் 43 வயதில் முதல்வரானார். சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 48 வயதில் தான் துணை முதல்வர் ஆகியுள்ளார். அவரது திறனையும், செயலையும் பாருங்கள் பிறகு பேச முடியுமா என்று சிந்தியுங்கள்.

இந்த மழை வெள்ளத்தை சரியாக கையாண்டு மக்களை காத்திட்ட முதல்வர், துணை முதல்வர், அமைச்சர்களின் செயல்பாட்டை மக்கள் வாழ்த்துகின்றனர். அவர்களோடு சேர்ந்து நாமும் நம் வாழ்த்துக்களை தெரிவிப்போம்.